



மதுராந்தகம் தொகுதி இடைத் தேர்தலை முன்னிட்டு மாநில மகளிர் அணி சார்பாக மதுராந்தகத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் க. சுந்தர், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். மாநில மகளிர் அணி துணை செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.அங்கையற்கண்ணி, திருமதி அமுலு மகளிரணி பிரச்சாரக் குழு செயலாளர்கள் சேலம் சுஜாதா, டாக்டர் மாலதி நாராயணசாமி, ராணி ரவிச்சந்திரன், தேன்மொழி, சமூகவலைத்தள பொறுப்பாளர் யாழினி கலந்துகொண்டு பேசினர். இந்நிகழ்ச்சியில் மகளிர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர் மற்றும் மகளிர் அணி உறுப்பினர்கள் மகளிர் அணியைச் சார்ந்த பெருந்திரளான மகளிர் கலந்து கொண்டனர்.






மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து கழக ஆதிதிராவிடர் நலக்குழு அணி சார்பில் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் அச்சரப்பாக்கம் அடுத்த பெரும் பேர் கண்டிகையில் கழக ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர், நிர்வாகிகள் அமுல் பொன்மலர், வி.பி.ராஜான், புஷ்பாராஜ், சிவக்குமார், உள்பட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், சேலம் உள்பட மாவட்ட, மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### புதிய தலைமைச் செயலகத்துக்கு எதிர்ப்பு!

# செப்.29-ல் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!

சென்னை,செப்.24-

புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் அரசாணையை ரத்து செய்யக் கோரி, வரும் செப். 29 ஆம் தேதி மீனவர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தை அறிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசின் புதிய தலைமைச் செயலகம் ரூ. 1,200 கோடியில் சென்னை பட்டினபப்பாக்கத்தில் அமைக்கப் போவதாக த.வெ.க. அரசு அறிவித்துள்ளது. இதற்கான முதல் கட்ட அனுமதியை அளித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்றும் அங்கு ஏற்கெனவே கூட்ட நெரிசல் இருக்கும் நிலையில், மேலும் போக்குவரத்து பாதிக்கப்படும் எனவும் கூறி அரசின் இந்த முடிவுக்கு பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் அமைக்கும் இந்த முடிவை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தவெக கூட்டணியில் உள்ள கட்சிகளே கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த நிலையில், பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் அரசாணையை ரத்து செய்யக் கோரி, வரும் செப்டம்பர் 29 ஆம் தேதி சென்னை மாவட்ட மீனவர்கள் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளனர்.

இந்த அறிவிப்பை முள்ளிக்குப்பம், முள்ளிமாநகர், மயிலை பகுதி அனைத்து மீனவ கிராம பஞ்சாயத்து சபை நேற்று அறிவித்துள்ளது.

# மதுராந்தகம் இடைத்தேர்தல்: கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனுக்கு வாக்கு சேகரிப்பு!

மதுராந்தகம்,செப்.24-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளரும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அவர்களின் ஆலோசனையின்படி நடந்த இவ்வாக்குச் சேகரிப்பில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், செய்யூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு, மதுராந்தகம் தெற்கு ஒன்றிய செயலாளர் பொன். சிவக்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட நல்லூர், நெமிலி, வாழப்பட்டு, இரும்பேடு, கீழ் ஜமீன்புதூர், மேல் ஜமீன்புதூர், சாலையூர், வேட்டூர், குருபாதமேடு, விளங்கனூர், கீழ்வசலை, மேல்வசலை, நீர்ப்பெயர், நீலமங்கலம், தொன்னாடு ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களிடம் இவ் வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது. அதுபோது, அவ்வூராட்சிகளைச் சேர்ந்த கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அரியலூரில் மாவட்ட தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தினர் சார்பில்

# ஒன்றிய பா.ஜ.க. - த.வெ.க. அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!

அரியலூர்,செப்.24–

அரியலூர் மாவட்டம் அரியலூர் அண்ணாசிலை அருகில் அகில இந்திய தொழிலாளர் முன்னேற்ற சங்க அறிவிப்பிற்கிணங்க மக்கள் விரோத, தொழிளார் விரோத, விவசாயிகள் விரோத, ஜனநாயக விரோத பா.ஜ.க., மற்றும் தமிழக த.வெ.க. அரசை கண்டித்தும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அரியலூர் மாவட்ட தொமுச தலைவர் ரெ. மகேந்திரன் தலைமை வகித்தார், முன்னதாக அரியலூர் மாவட்ட தொ.மு.ச. செயலாளர் பி.வி. அன்பழகன் அனைவரையும் வரவேற்றார். அரியலூர் மாவட்ட தொமுச துணைத் தலைவர், பி.அய்யாதுரை, மத்திய சங்க தலைவர் டி.சேகர், அரியலூர் மாவட்ட தொ.மு.ச. துணை செயலாளர் ஆர்.சங்கர், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் திருச்சி பாய்லர் தொழிற்சாலை பொதுச் செயலாளர் தீபன் கீழ்க்கண்ட தீர்மானங்களை விளக்கி கண்டன உரையாற்றி பேசியதாவது ஒன்றிய பாஜக மற்றும் தமிழக தவெக அரசும் தமிழக மக்களை வஞ்சிக்கின்ற மாதிரி செயல்படும் நடவடிக்கைகள் என்னவென்றால் அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில் உற்பத்தியாகும் சிமெண்ட்டை உள்ளாட்சித் துறை மற்றும் பொதுப்பணித் துறை கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிய அரசாணை வழங்க வேண்டும், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும். மின்சார சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற வேண்டும். மின்சாரத் துறையில் தனியாருக்கு வழங்கப்படும் பணிகளை நிறுத்த வேண்டும். ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தையும் கைவிட வேண்டும். விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, விளைப் பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும். விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும். தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும். சேலம் உருக்காலையை தனியார் வசம் ஒப்படைக்கும் நடவடிக்கையை கைவிட்டு, அதை மீண்டும் அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும், என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி பேசினர். ஆர்ப்பாட்டத்தில் அரியலூர் நகர செயலாளர் இரா. முருகேசன், நகராட்சி துணைத் தலைவர் கலியமூர்த்தி, தலைமை கழக பேச்சாளர்கள் கவிஞர் வீரமுரசு, பழ.புனிதம், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் ஜெயகுமார், தொமுச நிர்வாகிகள் எம்.கனகராஜ், க.இளங்கோவன், பி சித்திரவேல், எம் ரமேஷ், உ. தன்ராஜ், எம் கம்பர், பி வில்வேந்திரன், கொளஞ்சி, செல்வம், பி சுப்பிரமணியன், நடராஜ், ஆர. ,முத்தையன் ,சுப்பிரமணியன், ஜெய்சங்கர், ஆர். குமார், ஆர் கணேசன், ஆர் ராஜதுரை, எம். அன்பழகன், இளங்கோவன், ராஜேந்திரன், சி கருப்பையா, ஹபீப் ரஹ்மான், துரைராஜன், இளவரசன், கோவிந்தராஜ், பி.அய்யாதுரை, ஆர் ராமகிருஷ்ணன், பழனியப்பன், கே.கருணாநிதி, ஆர்.சீனிவாசன், விஜயகுமார், விஜயராகவன்,பூபதி சரவணன்,மகிழ்ச்சி மணி, ஹரி, கதிர், இளம்பரிதி, கிருஷ்ணன், பெரியசாமி, மணிகண்டன் , ஜெகன், ஆண்டவர் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மத்திய, மாநில அரசுகளின் தொழிலாளர் விரோத போக்கை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர் முடிவில் அரியலூர் மாவட்ட தொமுச கவுன்சில் பொருளாளர் இரா . திருஞான சம்பந்தம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

# சென்னை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் பிரச்சாரம்!

மதுராந்தகம்,செப்.24-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.கழக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு சென்னைத் தெற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் சென்னைத் தெற்கு மாவட்ட கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள், தி.மு. கழக தொண்டர்கள், தோழர்கள், அனைத்து அணிகளைச் சேர்ந்தவர்களும் சிறப்பான தேர்தல் பணியை ஆற்றி வருகின்றனர்.

அந்த வகையில் (21-9-2026) மாலை 5 மணியளவில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் - மேனாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில்மேனாள் அமைச்சர் பெருமக்கள் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர், கழக சட்டமன்ற கொறடா எ.வ.வேலு, எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் - மேனாள் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் ஆகியோர் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றனர்..

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.மகேஷ்குமார், பாலவாக்கம் க.சோமு, மாவட்ட கழக நிர்வாகிகள் பாலவாக்கம் த.விசுவநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகிபாண்டியன், எஸ்.பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், கே.கண்ணன், மு.ராஜா, எம். விநாயகமூர்த்தி, வே.ஆனந்தம், எஸ்.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, நொளம்பூர் வே.ராஜன், ஒன்றியக் கழக செயலாளர் கோவிலம்பாக்கம் வெங்கடேசன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.கே.ஏழுமலை, மின்னல் கந்தப்பன், களக்காடி எல்லப்பன், ராமாபுரம் வ.செல்வக்குமார், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன் மற்றும் சைதை மேற்கு பகுதி நிர்வாகிகள்: டி.என்.சிவமணி, ஆர்.ரமேஷ், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ந.தமிழரசு, எம்.நாகா, எஸ். பி.கோதண்டம், கு.புகழ்வேந்தன், சைதைகிழக்குப் பகுதியைச் சேர்ந்த எஸ்.குணசேகரன், தா.மோகன்குமார், முருகன், ஆரி, ஜி.வரதன், க.மணி, பெ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, உமாபதி, சலாம், மஜீத், மகேஷ்லாரன்ஸ், ரமேஷ்குமார், கலைஞர்நகர் வடக்குப் பகுதியின் நிர்வாகிகள் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மு.கோவிந்த ராஜன், வி.ஏ.ராஜா, எஸ்.மைக்கேல், பாஸ்கரன், விஜயகுமார், ஆர்.பாஸ்கர், பிரகாஷ், இரா.பாஸ்கர், மணிகண்டன், ரூபன், சரவணன், லோகபாரதி, ராமச்சந்திரன்,கலைஞர்நகர் தெற்குப் பகுதிக் கழகத்தின் நிர்வாகிகள் வாசுகிபாண்டியன், இரா.செழியன், பூக்கடை பழனிச்சாமி, கதிரேசன், செந்தில்குமார், சதீஷ்கண்ணன், கனிமொழி தனசேகரன், நிஷாசையத், அசோக், சமயன், யோகேஷ், அனல்அய்யப்பன், சுதா மற்றும் வேளச்சேரி கிழக்கு மற்றும் வேளச்சேரி மேற்குப் பகுதி கழகத்தின் நிர்வாகிகள்: அடையார் சி.சுரேஷ், சந்திரேஷ், கழக த.ரமேஷ், எழில்வாணன்,நா.டில்லிகுமார், த.பார்த்திபன்.

சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழகத்தின் நிர்வாகிகள் தேவராஜன், டேவிட்சவுந்தர்ராஜன், கே.பாலகிருஷ்ணன், இரா.ராஜேஷ்குமார், ஜெ.சரவணன், லோகு, குட்டி (எ) ராஜேந்திரன், ரமணன், டி.குமார், சோமசுந்தரம், கவாஸ்கர், முருகன், மணி சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிகே.வி.சாந்தப்பன். மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகத்தின் நிர்வாகிகள்: பி. எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி, கே.ராஜி, பெ. ரவி, எஸ்.ரமேஷ்ராஜ், பி.சுந்தர், ஜெ.பாஸ்கரன், பி.சார்லஸ், ராதாசெல்வம், மதுரவாயல் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள்: எஸ்.ஜி.மாதவன், ப.ஆலன்,எம்.கே.பி. அண்ணாதாசன், எம்.எம். ஜெயரத்தினம், சி.சசிக்குமார், எம்.இ. ஸ்டாலின், எம்.ரூபன், ஆர். கர்னல், தி.பாலாஜி, தாமஸ் மலை ஒன்றியக் கழகத்தின் நிர்வாகிகள்: சங்கீதாபாரதி ராஜன், பாரதிராஜன், சிவராமன்மற்றும் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகத்தின் நிர்வாகிகள் :இரா.வினோத், எஸ்.பி.அருள், ஐசக் நேசக்குமார், சதீஷ்குமார், ரவி, செல்வம், ராபர்ட் உள்ளிட்ட சென்னைத் தெற்கு மாவட்டச் சேர்ந்த கழக உடன்பிறப்புக்கள், கழக மூத்த முன்னோடிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.


### மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் – 2026

### தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக்கூட்டணிக் கட்சி

### வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து

### தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர்

## பேராசிரியர் டி.எம்.என்.தீபக்

## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!

**மதுராந்தகம் தொகுதி**

| | |
|---|---|
| 26.09.2026 சனிக்கிழமை | மோகல்வாடி ஊராட்சி |
| " | எலப்பாக்கம் ஊராட்சி |
| " | களத்தூர் ஊராட்சி |
| 27.09.2026 - ஞாயிற்றுக் கிழமை | வெண்மணி ஊராட்சி |
| " | நல்லாமூர் ஊராட்சி |

தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி சார்பில், மேற்கண்ட ஊராட்சிகளில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து மாநிலச் செயலாளர் டி.எம்.என்.தீபக் தலைமையில், மாற்றுத் திறனாளிகள் அணித் தலைவர் ரெ.தங்கம் மற்றும் மாநில நிர்வாகிகள் - கழகத் தோழர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்கின்றனர்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 22.09.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.




ஈரோடு மாவட்ட தொ.மு.ச. பேரவை சார்பில் மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி வழிகாட்டுதலின் படி அரசு ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் மீது ஜனநாயக விரோத போக்கை கடைபிடிக்கும் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் செயல்பாட்டை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கவுன்சில் தலைவர் கே.எஸ்.தமிழ்ச்செல்வன் தலைமையில் மாவட்ட கவுன்சில் செயலாளர் சே.கோபால், முருகேசன் ஆகியோர் முன்னிலையில் மாநில பேரவைச் செயலாளரும் ஈரோடு மாவட்ட தொ.மு.ச. மேலிட பார்வையாளருமான வழக்கறிஞர் வி.பி.வினோத்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் பி.எஸ்.பாலகுமார், ஏ.மாரிமுத்து, பி.ஜி.சீனிவாசன், எம்.சுந்தர்ராஜன், பி.காசிராஜன், உள்ளிட்ட தொ.மு.ச. நிர்வாகிகள் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் சி.தங்கமுத்து நன்றி கூறினார்.


### மதுராந்தகம்–தாராபுரம் இடைத்தேர்தல் பணிகளுக்கான

## தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்புக் குழு!

### அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மதுராந்தகம்-தாராபுரம் தொகுதிகளில் தி.மு.க வேட்பாளர்களின் வெற்றிக்காக களத்திலும் சமூக வலைத்தளங்களிலும் பணியாற்றிடும் வகையில், கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்புக் குழுவில் பின்வரும் துணைச் செயலாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**மதுராந்தகம் தொகுதி -**

**முதன்மைப் பொறுப்பாளர் திரு.அ.தமிழ்மாறன்**

**பொறுப்பாளர்கள்–**

| | |
|---|---|
| மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் | - திரு.C.H.சேகர் |
| மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் | - திரு.அழகிரி சதாசிவம் |
| அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் | - டாக்டர் A.K.தருண் |
| அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் | - திரு.P.M.ஸ்ரீதர் |
| அச்சிறுபாக்கம் மத்திய ஒன்றியம் | - திரு.S.D.இசை |
| மதுராந்தகம் நகராட்சி | - திரு.சுரேஷ் |
| கருங்குழி பேரூராட்சி | - திரு.நவீன் |

அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி – திருமதி.பத்மப்பிரியா – திருமதி.திவ்யா சத்தியராஜ்

**தாராபுரம் தொகுதி**

**முதன்மைப் பொறுப்பாளர்– திரு.பா.கேசவன்**

| | |
|---|---|
| தாராபுரம் மேற்கு ஒன்றியம் | - திரு.விஜய கதிரவன் – திரு. பா.ச பிரபு |
| தாராபுரம் கிழக்கு ஒன்றியம் | - திரு.அ.தமிழ்மறை |
| குண்டடம் மேற்கு ஒன்றியம் | - திரு.அ.தமிழ்மறை |
| மூலனூர் மேற்கு ஒன்றியம் | - திரு.பா. ச.பிரபு |
| மூலனூர் கிழக்கு ஒன்றியம் | - திரு.மதுரை பாலா |
| ருத்ராவதி பேரூர் | - திரு.தரணிதரன் |
| மூலனூர் பேரூர் | - திரு.ராஜராஜன் |
| கொளத்துப்பாளையம் பேரூர் | - திரு.விஜய கதிரவன் – டாக்டர் அழகுராஜா |
| சின்னக்கப்பாளையம் பேரூர் | - டாக்டர் அழகுராஜா |
| கன்னிவாடி பேரூர் மற்றும் வெள்ளக்கோவில் ஒன்றியம் | - திரு. பா.ச.பிரபு |
| தாராபுரம் நகரம் | - திரு.ஏ.கே.அருண் |

இடைத்தேர்தல் தொகுதிகளுக்கான தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கழகத் தலைமை அறிவித்துள்ள தேர்தல் பொறுப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை
நாள்- 22.09.2026

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்,
தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.